Australian Government
Department of Home Affairs

# கடல்சார் பயணப் பிரகடனம்

## கண்ணோட்டம்

அவுஸ்திரேலியாவிற்கு கடல் வழியாக பயணித்து வரும் பயணிகள் கடல்சார் பயணப் பிரகடனத்தை (Maritime Travel Declaration, MTD) சமர்ப்பிக்க வேண்டும். அவுஸ்திரேலியாவிற்கு உங்கள் பயணத்திற்காக உங்கள் கப்பலில் ஏறும் முன் கடல்சார் பயணப் பிரகடனத்தை (MTD) சமர்ப்பிக்க வேண்டும். நீங்கள் கப்பலில் ஏறுவதற்கு 3 முதல் 10 நாட்களுக்குள் உங்கள் MTD-ஐச் சமர்ப்பிக்க வேண்டும். MTD-ஐ நிரப்பும்போது, நீங்கள் செய்ய வேண்டியவை:

- அவுஸ்திரேலியாவில் தொடர்பு கொள்வதற்கான மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண் உட்பட உங்கள் தொடர்பு விவரங்களை வழங்க வேண்டும்
- உங்கள் கோவிட்-19 தடுப்பூசி நிலவரம் தொடர்பாக பிரகடனத்தை அளிக்க வேண்டும்
- நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன்பு, கடந்த 14 நாட்களில் நீங்கள் மேற்கொண்ட சர்வதேச பயண விவரங்களை அறிவிக்க வேண்டும்
- நீங்கள் தரையிறங்கும் மாநிலம் அல்லது பிராந்தியத்திற்கு வரும்போது அங்கு நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் மற்றும் பரிசோதனைத் தேவைகள் குறித்து அறிந்திருக்கிறீர்கள் என்றும், அவற்றுக்கு இணங்காவிட்டால் விதிக்கப்படும்

தண்டனைகள் குறித்தும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்றும் பிரகடனம் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** உங்கள் MTD-ஐப் பூர்த்தி செய்வதற்கு முன், அவுஸ்திரேலியாவில் நடைமுறையில் இருக்கும் பயணம் தொடர்பான பிற நிபந்தனைகளையும் சரிபார்க்கவும். பயணம் செய்வதற்கு முன் உங்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களின் பட்டியலுக்கு, தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகள் மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகளுக்கான தகவலைப் பார்வையிடவும்.

அவுஸ்திரேலியாவிற்கு கடல் வழியாக பயணித்து வரும் பயணிகள் டிஜிட்டல் பயணப் பிரகடனத்தை (DPD) சமர்ப்பிக்க **வேண்டியதில்லை**.

கடல்சார் பயணப் பிரகடனமானது (MTD) கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குப் பயணிப்பவர்களுக்கு மட்டுமே. நீங்கள் விமானம் மூலம் அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்கிறீர்கள் என்றால், அதற்குப் பதிலாக டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனத்தை (DPD) சமர்ப்பிக்கவும்.

## தண்டனைகள் மற்றும் அமலாக்கம்

அவுஸ்திரேலியாவிற்கு உங்கள் பயணத்திற்காக உங்கள் கப்பலில் ஏறும் முன், உங்கள் தடுப்பூசி நிலை பற்றிய பிரகடனம் உட்பட முக்கியமான தகவல்களை வழங்க கடல்சார் பயணப் பிரகடனத்தை (MTD) பயன்படுத்த வேண்டும். இது நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு விதிமுறையாகும். விதிமுறைக்கு இணங்கத் தவறும் நபருக்கு 30 தண்டப்பண யூனிட்கள் (தற்போது $6,660 AUD) எனும் சிவில் தண்டனை (அபராதம்) விதிக்கப்படலாம். இது *உயிரியல் பாதுகாப்பு சட்டம் 2015* இன் பிரிவு 46 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு பொய்யானத் தகவல்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்குவது கடுமையான குற்றமாகும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 12 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.**

பொது சுகாதாரத் துறையின் உத்தரவுகளுக்கு இணங்காமல் இருப்பவர்களுக்கு மாநிலங்களும் பிராந்தியங்களும் தண்டனைகள் விதிக்கலாம். கோவிட்-19 பரிசோதனை மற்றும் சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுதல் அல்லது தனிமைப்படுத்தல் விதிமுறைகள் ஆகியவை இதில் அடங்கும். நீங்கள் உள்நுழைந்தவுடன் பொது சுகாதார உத்தரவுகள்

அல்லது பூர்த்தி செய்ய வேண்டிய விதிமுறைகளுக்கு இணங்கவில்லை என்றால், நீங்கள் சிறைத்தண்டனை அல்லது குறிப்பிடத்தக்க தண்டப்பணங்கள் உட்பட கடுமையான தண்டனைகளைச் சந்திக்க நேரிடலாம். குறுகிய கால அறிவிப்பில் இந்த விதிமுறைகள் மாறுபடலாம். மேலதிகத் தகவலுக்கு, மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளைப் பார்வையிடவும்.

அவுஸ்திரேலியாவிற்கு வருகைப்புரியும் பின்வரும் தற்காலிக விசாதாரர்களின் விசா ரத்து செய்யப்படலாம், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படலாம்:

- அவுஸ்திரேலியாவின் எல்லைக்குள் நுழைவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொள்ளாதவர்கள்
- அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, கோவிட்-19 தடுப்பூசிக்கு மருத்துவரீதியாக ஒவ்வாமை எதுவும் இல்லாதவர்கள்
- தடுப்பூசி போட்டுக்கொள்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட பிரிவில் இல்லாதவர்கள் அல்லது தனிப்பட்ட முறையில் பயண விலக்கு பெற்றவர்கள்.

## உங்கள் பிரகடனத்தைப் பூர்த்தி செய்யவும்

MTD ஆன்லைன் படிவத்தைப் பயன்படுத்தி உங்கள் கடல்சார் பயணப் பிரகடனம் (MTD)-ஐப் பூர்த்தி செய்யலாம்.

நீங்கள் ஒரு கணக்குத் (account) திறக்க வேண்டியிருக்கும், இது உங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால பிரகடனங்களை ஒரே இடத்தில் நிர்வகிக்க அனுமதிக்கும்.

## உங்கள் பிரகடனத்தைத் தொடங்குதல்

MTD-க்கு நீங்கள் பணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை - இது இலவசமானது.

உங்கள் பிரகடனத்தைத் தொடங்குவதற்கு முன், பின்வரும் தகவலைத் தயாராக வைத்திருக்கவும்:

- கப்பல் பெயர் மற்றும் வகை
- புறப்படுதல் மற்றும் வருகை துறைமுகங்கள்

- செல்லுபடியாகும் பாஸ்போர்ட்
- நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு 14 நாட்களுக்கு முன்பான சர்வதேச பயணம்
- கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான பதிவு அல்லது மருத்துவக் காரணங்களினால் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்றால், அது குறித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள்

ஒவ்வொரு உரிமை வயதுவந்தோரும் தங்களின் சொந்த பிரகடனத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, அக்குழந்தைகளின் பெற்றோர் பிரகடனத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். நீங்கள் பூர்த்தி செய்த பிரகடனத்துடன் ஒரு மின்னஞ்சலைப் பெறுவீர்கள், அதை நீங்கள் அச்சிடலாம் அல்லது பதிவிறக்கம் செய்யலாம்.

## சுற்றுப் பயணக் கப்பல்கள்

ஒரு சுற்றுப் பயணக் கப்பல் அவுஸ்திரேலியாவில் தொடங்கி அங்கேயே வந்துசேர்ந்தால், பயணத்தின் தொடக்கத்திலே கப்பலில் பயணித்திருந்தால், பயணிகள் மற்றும் பணிக் குழுவினர் கடல்சார் பயணப் பிரகடனத்தை (MTD) பூர்த்திச் செய்ய வேண்டியதில்லை. உள்நாட்டு கப்பல்கள் மற்றும் அவுஸ்திரேலியாவில் தொடங்கி அங்கேயே வந்துசேரும் சர்வதேச கப்பல்களும் இதில் அடங்கும்.

நீங்கள் ஒரு வெளிநாட்டு துறைமுகத்திலிருந்து ஒரு சுற்றுப் பயணக் கப்பலில் பயணித்தால், நீங்கள் பயணத்தில் சேரும் முன் MTD-ஐப் பூர்த்திச் செய்ய வேண்டும்.

## கடல்சார் பணிக் குழுவினர்களுக்கான தகவல்

ஓர் உல்லாசக் கப்பலில் பணிபுரியும் கடல்சார் பணிக் குழுவினர், அவுஸ்திரேலியாவுக்கு கப்பலில் ஏறுவதற்கு முன் கடல்சார் பயணப் பிரகடனத்தை (MTD) பூர்த்திச் செய்ய வேண்டும். அவுஸ்திரேலியாவுக்கான பயணத்தில் உங்கள் கப்பல் பல துறைமுகங்களில் நிறுத்தப்பட வேண்டியிருந்தால், முதல் துறைமுகத்திலிருந்து புறப்படப்படுவதற்கு முன்பே MTD பூர்த்திச் செய்யப்பட வேண்டும்.

கப்பலின் பொறுப்பாளர் அல்லது கப்பல்சார் பணிக் குழுவினர் பயணத்தின் போது பயணிகளுடன் தொடர்பு கொள்ளவில்லை என்றாலோ, அவுஸ்திரேலிய பிரதேசத்தில்

இருக்கும்போது கப்பலில் இருந்து இறங்க விரும்பவில்லை என்றாலோ MTD-ஐச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

வணிகசார் கப்பல்களின் கடல்சார் குழுவினர் MTD-ஐப் பூர்த்திச் செய்யவேண்டிய அவசியமில்லை. வணிகசார் கப்பலில் பயணிக்கும் பயணிகள் MTD-ஐப் பூர்த்திச் செய்யவேண்டும்.

அவுஸ்திரேலியாவில் உள்நாட்டில் இயங்கும் கப்பல்களுக்கு MTD-ஐப் பூர்த்திச் செய்யவேண்டிய அவசியமில்லை.

தாங்கள் பயணிக்கும் கப்பலில் ஏற **விமானம் மூலம்** அவுஸ்திரேலியாவுக்கு வரும் அனைத்து கடல்சார் பணிக் குழுவினரும் MTD அல்லாமல், டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனத்தைப் (DPD) பூர்த்திச் செய்ய வேண்டும். கடல்சார் பயணப் பிரகடனமானது (MTD) கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு வரும் பயணிகளுக்கு மட்டுமே.

## உங்கள் கடல்சார் பயணப் பிரகடனத்தின் பயன்பாடு

கடல்சார் பயணப் பிரகடனம் (MTD)-ஐப் பூர்த்திச் செய்துவிட்டால் நீங்கள் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து விடலாம் என்ற உத்தரவாதம் கிடையாது.

நீங்கள் MTD-ஐச் சமர்ப்பித்தவுடன், உங்கள் கப்பலில் ஏறுவதற்கு முன்பும் அவுஸ்திரேலியாவுக்கு வரும்போதும் (அச்சிடப்பட்ட அல்லது மின்னணு முறையில்) காட்டப்பட வேண்டிய மின்னஞ்சலைப் பெறுவீர்கள். உங்கள் MTD கணக்கிலும் உங்களின் பயன்பாட்டை அணுகலாம்.

கப்பலை இயக்குபவர்கள் நீங்கள் புறப்படுவதற்கு முன் உங்கள் MTD பயன்பாட்டை மதிப்பாய்வு செய்வார்கள். உங்களின் பூர்த்திச் செய்யப்பட்ட MTD பின்வருபவற்றை உறுதிசெய்யும்:

- **பச்சை:** உங்கள் பிரகடனத்தில் நீங்கள் உள்ளிட்டுள்ள தகவல், அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு அவுஸ்திரேலியாவின் தடுப்பூசித் தேவைகளைப் பூர்த்திச் செய்வதைக் குறிக்கிறது. இருந்தாலும், செக்-இன் செய்யும்போது உங்கள் ஆவணங்களை நீங்கள் காண்பிக்க வேண்டும். நீங்கள் கப்பலில் ஏறுவதை அனுமதிக்க உங்கள் கப்பலை இயக்குபவர்களே இறுதி முடிவை எடுப்பார்கள்.

- **நீலம்:** உங்கள் பிரகடனத்தில் நீங்கள் உள்ளிட்டுள்ள தகவல், உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கு அவுஸ்திரேலியாவின் தடுப்பூசித் தேவைகளை நீங்கள் பூர்த்திச் செய்யக்கூடும் என்பதைக் குறிக்கிறது. நீங்கள் பயணம் செய்வதற்குமுன் கப்பலை இயக்குபவர் சில மேலதிகச் சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.
- **சிவப்பு:** உங்கள் பிரகடனத்தில் நீங்கள் உள்ளிட்டுள்ள தகவல், சர்வதேச பயணத்திற்கான அவுஸ்திரேலியாவின் தடுப்பூசித் தேவைகளை நீங்கள் பூர்த்திச் செய்யவில்லை என்பதை குறிக்கிறது. பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு பெறவில்லை எனில், உங்களால் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முடியாது. கப்பலை இயக்குபவர்கள் கூடுதல் சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும், அதோடு நீங்கள் கப்பலில் ஏற முடியுமா என்பதை தீர்மானிப்பார்கள்.

நீங்கள் பயணிக்கவிருக்கும் அல்லது கடந்துச் செல்லத் திட்டமிட்டுள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கான பயண மற்றும் தனிமைப்படுத்துதலுக்கான ஏற்பாடுகளை நீங்கள் சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு அவுஸ்திரேலிய மாநிலத்திலும் பிராந்தியத்திலும் விதிமுறைகள் வித்தியாசமாக இருக்கும். மேலதிகத் தகவலுக்கு மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளைப் பார்வையிடவும்.

## கப்பலை இயக்குபவர்களுக்கான மேலதிகத் தகவல்

உல்லாச கப்பலை இயக்குபவர்கள், வணிகக் கப்பல்கள், சொகுசு கப்பல் மற்றும் சொகுசு க்ராஃப்ட் உள்ளிட்ட கப்பலை இயக்குபவர்களுக்கு, ஜாக்கிரதையாக இருப்பதற்கான மேலதிகத் தேவைகள் உள்ளது. கடல் வழியாக நுழைதல் மற்றும் வெளியேறுதல் என்பதைப் பார்வையிடவும்.

## ஆதரவு

உங்கள் MTD-ஐப் பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவைப் பார்வையிடவும்.